கடவுள் துணை

மதுரைச் சில்லா மாபலிச்சேரியில்

# மாமியார் கொடுமை சகியாத மருமகள்

காரீயத்தைக் காய்ச்சிக் காதிலூற்றிக் கொன்ற

# வேடிக்கைச் சிந்து.



இஃது,

மதுரை புத்தகப் பிரசங்கம்

எம். ஏ. ஹாதி சாஹிபு அவர்களால்

வெளியிடப்பெற்று,

கொழும்பு, செட்டித்தெரு 190-ம் நி. புத்தகஸாப்,

ப. முஹியித்தீன் பிச்சை சாஹிபு

அவர்களால்

கொழும்பு, செட்டித்தெரு, "டயமன்ட்" அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை ] 1927 [ அணா 2

(ரிஜிஸ்டர் காபி ரைட்.)

கடவுள் துணை;

மாமியார்காதி லீயங்காய்ச்சிவூற்றின

மருமகளின்

# வேடிக்கைச் சிந்து.

காப்பு.

மாமியார் செய்கொடுமை மனமுகந்து சகியாமல்
மாமியார் காதிலீயங் காய்ச்சியே வூற்றிக்கொன்ற
காமியாம் மருமகளின் காரணத்தைச் செப்புதற்கு
லாமீமாய் நின்றிலங்கும் நாயகன் காப்புத்தானே.

இராகம் நாதநாமக்கிரியை-தாளம் ஆதி

பல்லவி.

வேடிக்கை கேளீர்—மாமியைக் கொலைசெய்த
விபரீதம் பாரீர்

அநுபல்லவி.

மாமிசெய் கொடுமையைச் சகியாமல் மருமகள்
காரீயங் காய்ச்சியே காதிலூற்றிக் கொன்ற [வே

சரணங்கள்

மதுரைச்சில்லாவைச்சேர்ந்த மாபலிச்சேரியில்
சதுர்மறையுங்கற்ற சாம்பசிவய்யரின்
பதியாம் சுப்புலெட்சுமி பண்புடன்வாழ்கையில்
விதியால் விசாலாட்சி விண்ணுலகடைந்திட்ட

விந்தையைக் கேளீர்—மருமகளைப் பேசும்
விதங்களைப் பாரீர்

Digitized by Roja Muthiah Research Library

எந்தன்மகனுக்கு எங்கிருந்திவள் வந்தாள்
என்னோமுழியிவள் தின்றுகொழுக்கின்றாள்
வந்ததும்புருஷனை மயக்கிப்போட்டுக்கொண்டாள்
எங்கள்-வாடையடிக்காமல் சீறிவிழுகின்றாள்

என்னடி சிறிக்கி—அந்தப்பயல் வாட்டும்
விடுகிறேன் முடுக்கி

காலையில்விழிப்பதில்லை கைகால்கழுவதில்லை
சாணிகரைப்பதில்லை ஜல்தெளிப்பதில்லை
சேலைதோய்ப்பதில்லை சீக்கிரம்சமைப்பதில்லை
சிறுக்கிகுலுக்கியென்னை ரொம்பமதிப்பதில்லை

என்னடி யுன்வாழ்வு – நிலைக்கு நிற்காதடி
வருமடி தாழ்வு

கண்ணாடிசீப்புந்தான் கையினில் என்னேரம்
காதுங்கண்மூக்கையும் கண்டால்வெகுகோரம்
மண்ணாகப்போவானைப் பெண்ணைப்படைத்தபாரம்
எண்ணியெந்தன்மகன் ஏங்கினான் மிகதூரம்

கரைந்துமே போனான் —இவள்வந்த நாளாயென்னை
மறந்துமே போனான் — என்

வீட்டுச்சாமான்கள் வெளியினிற்போகுது
வெகுபேர்சிநேகம் இருக்கிறாளிப்போது
காட்டிக்கொடுத்திங்கே என்னமாயிருப்பது
கண்டபடிபோனால் எப்படிசகிப்பது

ஈதென்ன ஆண்மை—இவளுக்கு வந்த
அதிகார நேர்மை

பானைசட்டிகளெல்லாம் பொடியாய்நொருக்கிவிட்டாள்
படிகாப்படியெல்லாம் விறகாயெரித்துவிட்டாள்
அம்மிக்கல்குழவியை அறைத்துக்கரைத்துவிட்டாள்
ஆளும்பண்டமெல்லாம் அள்ளியிறைத்துவிட்டாள்

என்னென்ன போச்சோ—எப்படியானாலும்
இவளுக்கென் ஏச்சோ

அடுப்பையுடைத்துவிட்டாள் துடுப்பையொடித்துவிட்டாள்
ஆறுவருஷமாயுள்ள அகப்பையமுறித்துப்போட்டாள்
கல்லைப்பேர்த்துவிட்டாள் நெல்லைக்கொரித்துவிட்டாள்
காணாமல்வைத்தஎன்காசை தூக்கிப்போட்டாள்

Digitized by Roja Muthiah Research Library

இவளென்ன பேயோ—எங்கும் சுற்றித்திரிந்த
இருஜாதி நாயோ-அடிநான்

ஒன்றுசொன்னலிவள் ஒன்பதுசொல்கிறாள்
ஏனமற்சண்டைக்கு என்வாயைப்பிடுங்கிறாள்
பாழும்பயல்வந்தால் பசப்பிப்போடுகிறாள்
பல்லையிளிக்கவும் புலம்பத்தடங்குகிறாள்

என்னடி நீலி—உனக்கொட்டுமோ
என்பிள்ளைத் தாலி

செம்புதேய்த்துப்போட்டாள் லோட்டாஉடைத்துப்போட்டாள்
சொகுசானவடிதட்டை பாழாகச்செய்துபோட்டாள்
கல்லான குடத்தையுங் கரைத்து தீர்த்துவிட்டாள்
கனமான அண்டாவை கடுகாய் துளைத்துவிட்டாள்

இவளென்ன இரும்பூ—எந்தன் பண்டங்களை
தினைக்கிறாள் துரும்பாய்

சல்லாடைமுறங்களை பஞ்சாய்ப்பறக்கவிட்டாள்
சரியானகூடையை தவிடாய்நொருக்கிவிட்டாள்
உலக்கைக்குந்தாணியை உடைத்துக்குவித்துபோட்டாள்
ஒழுங்காயிருந்தவென் உரலைதகர்த்துபோட்டாள்.

வந்தாளே மிருகம்—எனக்காக
செய்தாளே கிருவம்

விளக்குதொடைப்பதில்லை வீடுமொழுவதில்லை
வெளியிற்கிடைக்கும சாணி தட்டிப்போடுவதில்லை
மாட்டைப்பார்ப்பதில்லை கன்றைத்தேய்ப்பதில்லை
மறுபடிஎன்னத்துக்கிருக்கிறாள் இவள் தொல்லை

அறியாமற்போனேன்—அந்தக்காலத்தில் நான்
தெரியாமற்போனேன்.

அண்டைஅடுத்தவீட்டில் பெண்டுகளில்லையா
அவளெல்லாமிப்படித்தான் செய்வார்கள்சொல்வாயா
அனியாயமிந்தவீட்டில் கேட்பார்களில்லையா
ஆகாது ஆகாது என்னேரமித்தொல்லையா

இதுமட்டுமல்ல—என்னுக்குப் போதாது
அதையிங்கு சொல்ல

Digitized by Roja Muthiah Research Library

சமைக்கும் சமையல்பூராவும்     நாய்கூடத் தின்காது
சாப்பிட உட்கார்ந்தால்     நமக்குப் பிடிக்காது
என்ன சொன்னாலும்     அவள்காதுமே கேட்காது
ஏதேது நமக்கிவள்     இனிமேல் முடியாது
போச்சுதே அலுத்து- பிர்மன் எழுதின
தலையிணிலெழுத்து—அவள்

பயலுக்குமட்டுமே     பயந்துநடக்கிறாள்
மற்றவர் பேச்சுக்கு     எதிர்த்துபேசுகிறாள்
அண்டைவீட்டேகெதி     யென்றுமேபோகிறாள்
ஆனாலும் இவள் ரொம்ப     அனியாயம் செய்கிறாள்
யார்கொடுத்தானோ—இந்தத் தைரியம் அந்தப்
பயல்கொடுத்தானோ

இவள்-கெட்டகேட்டுக்கு     இடுப்புச்சேலையொன்று
ஏதுங்கெட்டமூளிக்கு     பட்டுரவிக்கையொன்று
காதுக்கு ஓலை     கழுத்துச்சாடுமொன்று
கைக்கு வளையலும்     காலுக்குத்தண்டையுமொன்று
அடியே சக்களத்தி—வயிற்றை யெரியுதடி
பெருமாயக் குறத்தி

கறியென்ன வேண்டாமென்றால்     பொரியல்செய்துபோடுறாள்
காப்படி வடிக்கச்சொன்னால்     அரைப்படி வடிக்கிறாள்
ரஸம்செய்துபோடென்றால்     குழம்புசெய்துபோடுறாள்
ரவைகூடயில்லாடில்     சாப்பிட்டுபோடுறாள்
வயிறென்ன சாலோ—அவளுக்கு மட்டும்
உயிரென்ன மேலோ

சிங்காரக்குடித்தனம்     சீருகெட்டுப்போச்சு
சேதியெங்குந்தெரிந்து     சிரிப்பாய் சிரித்தாச்சு
இனியிந்த சிறுக்கியை     வைத்தால்மோசம் மாச்சு
இவளில்லாவிட்டாலென்ன     இங்கே குறைந்துபோச்சு
வந்தாளே அம்மா—என்னை வாழவைத்தது
துடிக்குதே சும்மா

அந்தப்பயல்வரட்டும்     அடிக்கிறேன்மாற்றாலே
அவனுமிவளுமாகப்     போகட்டும் தெருவாலே
ஆயிரமானாலும்     இருக்கப்படாதினிமேலே
ஆர்வந்தாலும் சரி     சொல்வேனிதைப்போலே
அவனென்ன கண்டான்—கண்டாலுமவன்
இவள்கோடு தாண்டான்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
P.M.DIST. INDIA

Digitized by Roja Muthiah Research Library

## தாயார் மகனிடம் சொல்லும் நொண்டிச் சிந்து,

அப்பா கொண்டைக்காரா உங்
அருமைப் பெண்டாட்டி சேதி கேளடா
ஊரிலில்லாத பட்டி அவள்
உதைக்க வந்தாள் என்னை அடிக்க வந்தாள்
நானொன்றும் பேசவே யில்லை எனக்கு
நாதியில்லை யெனத் தெரிந்து கொண்டாள்
போடுபோ டென்று போட்டாள் என்னைப்
புரட்டிவிட்டாள் தரையில் உருட்டி விட்டாள்
ஒருவருமில்லை யப்போ அதைநான்
உன்னிடம் சொல்லவே பொறுத் தேனடா
கேட்டால் நீ கேளு பின்னே
கேட்கா விட்டா லின்னம் வேறு யாரு
தெய்வந்தானிருக்கு அல்லது
ஓடிருக்கு இந்த ஊரிருக்கு
பார்த்துக்கொள்ளுகின்றேன் நீங்கள்
பயலும் சிறுக்கியுமாய் இருந் தாளுங்கள்
என்னடா அவ்வளவு அவளுக்கு
ஆண்மை வந்ததோ தெரிய வில்லை
அதைத்தான் பார்ப்போமே ரெம்பவும்
வீம்புக்காரி அவள் ராங்கிக் காரி
என்னத்தைக் கொண்டுவந்தாள் அங்கிருந்து
இடுப்புச்சேலையோடு தானே வந்தாள்
அப்பா அவள் வேண்டாம் உன்னை
ஆட்டிவைப்பாளவள் ஓட்டி வைப்பாள்
பெருத்த மோசக்காரி அவள்
பிரியமாய் வைப்பாள் மருந் துனக்கு
அரைக்ஷணம் கூடாது வேறு
எவளேயாகிலுமே கட்டிக்கொள்ளு (தந்

# கும்மி.

இந்தவிதமாகப் பேசுவதை யெல்லாம்
ஏந்திழை கேட்டு மனம்வாடி
தந்திரமாகத் துலைக்க வேண்டுமென்று
தன்மனதிலெண்ணங் கொண்டுவிட்டாள்

சாம்பசிவய்யரும் கோர்ட்டு விஷயமாய்
சாத்தூருபோய்வர நேர்ந்திடவே
பாந்தமுள்ள பத்னி சுப்புலட்சுமியை
பாங்குடனழைத்து ஏதுரைப்பார்

சாந்தகுணமுள்ள பெண்ணணங்கே நான்
சாத்தூரு போய்ரெண்டு நாளில்வாரேன்
பார்த்துக்கொள் தாயாரைப்பட்சமுடனாகப்
பைங்கிளியே யென்று தானடந்தார்

இந்த விதஞ்சொல்லி ஏகிடவும் சிறு
மங்கைமனது தயங்கிடவும்
மந்தபுத்தியுள்ளமாமி எதிர்வந்து
சங்கையில்லாமல் மொழியலுற்றாள்

மாப்பிள்ளை தன்னைப்பிரியாமல் சதா
மடியில்படுத்துப் பிறள்வதுண்டோ
ஆம்பிடையான் சென்றுவிட்டாலென்ன வீட்டு
அலுவலைப் பாரெண்டி கள்ளியென்றாள்

இந்த மொழிதன்னைக் கேட்டவுடன்மாது
மெத்த மனது திகைத்துநின்று
எந்தவிதத்திலு மிந்தமூதேவியை
இன்றே துலைத்திட வேண்டுமென்று

எண்ணிப் பலவித யோசனைகள்செய்து
இன்பமுடன்மாமி யண்டை வந்து
கண்ணியமுள்ள என் அத்தையரே உங்கள்
கட்டளைப்போலவே நான் நடப்பேன்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106

Digitized by Roja Muthiah Research Library

சாதங்கரிகள் சமைத்திருக்கேன் வந்து
சாப்பிட் டிளைப்பாறு மென்றுசொல்ல
மாதின் மருமமரியாத மாமியும்
மனமகிழ்ச்சியுட னெழுந்து

எந்தன்மனதுக் குகந்தவளே யின்று
இருவரும் சேர்ந்து புசித்திடுவோம்
உந்தன் வேலைகள் முடிந்தவுடன் வந்து
உறங்கிடுவாயென்று தான்படுத்தாள்

படுத்துநித்திரை செய்கையிலே சிறு
பாவையுமகண்டு மனமகிழ்ந்து
எடுத்து ஈயத்தைக் கரண்டியில்வைத்து
அடுப்பிலேற்றிக் கொதிக்க வைத்தாள்

இருமபுகரண்டியி லீயங்கொதித்திட
ஈவிரக்கம் சற்றும்பாராமல்
சிறுமியும்மனத்துணிவுடன் மாமியின்
செவியிலீயத்தைச் சாய்த்துவிட்டாள்

கொதிக்குமீயத்தைக் கொட்டிடவே காது
குருத்து வெந்து வுருகிடவே
படுத்துத்தூங்கின பாவிவிசாலாட்சி
அடுத்தாள் எமபுரம் நேசர்களே

மாமியை கொன்றிட்ட மங்கையின் வேடிக்கை
மாநில நண்பர் அறியவேண்டி
மாமதுரைப்பிரசங்க வித்வான் எம். ஏ.
ஹாதி எழுதியே அச்சடித்தேன்

முற்றிற்று.

---

இதன் இரண்டாம் பாகம் கூடியசீக்கிரம் வெளியாகும்.

N. B. இந்தப்புத்தகமும் இதரபுத்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வேண்டியவர்கள் நேரிலும் வி. பி மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

எம். ஏ. ஹாதி,
புத்தக வியாபாரம், மதுரை.

Digitized by Roja Muthiah Research Library

# புஸ்தக விளம்பரம்.

| | ரூ | அ |
|---|---|---|
| பெரிய அரிச்சுவடி | 0 | 2 |
| சின்ன அரிச்சுவடி | 0 | 1 |
| மாரியம்மன் தாலாட்டு | 0 | 1 |
| மானிடக்கும்மி | 0 | 1 |
| மாதர் ஒப்பாரி | 0 | 1 |
| பலசரக்கு ஏலப்பாட்டு | 0 | 1 |
| சிவவாக்கியம் | 0 | 2 |
| பாம்பாட்டி சித்தர்பாடல் | 0 | 1 |
| சண்டிகவசம் | 0 | 1 |
| சிவசெந்திமாலை | 0 | 1 |
| சுப்பிரமணியமாலை | 0 | 1 |
| தமிழறியும் பெருமாள் கதை | 0 | 2 |
| மதுரைவீரசுவாமி கதை | 0 | 2 |
| சிங்களமும் தமிழும் ஒக்கப்பிலேரி | 4 | 0 |
| நாலுபாஷைஒக்கப்பிலேரி | 4 | 0 |
| விவேகசிந்தாமணி | 1 | 0 |
| ஷைமூலமும் உரையும் | 4 | 0 |
| திருபுகழ் 200பாட்டு | 6 | 0 |
| ஷை 150 பாட்டு | 4 | 0 |
| தேவாரத்திரட்டு | 4 | 0 |
| தொடுகுறி சாஸ்திரம் | 2 | 0 |
| கெவுளி சாஸ்திரம் | 2 | 0 |
| முருகர் ஒயில்கும்மி | 2 | 0 |
| 18சித்தர் ஞானக்கோவை | 1 | 8 |
| பட்டினத்தார் பாடல் | 0 | 2 |
| ஷைமூலம்உரை கிலேஸ் கலிகோ புயிண்டு | 2 | 0 |
| சில்லரைக் கோர்வை 200 புஸ்தகம். | 1 | 8 |
| குமரேசர் சதகம் | 0 | 2 |
| ஷை மூலமும் உரையும் | 1 | 0 |
| அரப்பளி சதகம் | 0 | 2 |
| ஷை மூலமும் உரையும் | 1 | 0 |
| சிவசாமி நாடகம் | 1 | 8 |
| நீதிநெறி அரிச்சந்திரநாடகம் | 2 | 0 |
| குணங்குடி மஸ்தான்சாகிபு பாடல் | 1 | 8 |
| 18 சித்தர் நாடி | 1 | 4 |

| | ரூ | அ |
|---|---|---|
| 18 சித்தர் வைத்திய சில்லரைக் கோர்வை | 1 | 8 |
| விநோதரசமஞ்சரி கிலேஸ்பயி | 2 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 |
| விராடபர்வம் நயிஸ்பயிண்டு | 1 | 8 |
| இராம நாடகம் | 1 | 4 |
| ரோமரிஷி விஞடி பஞ்சபக்ஷி | 1 | 4 |
| மலையாளமாந்திரீகம் | 1 | 0 |
| தாயுமானசுவாமி பாடல் | 0 | 12 |
| ஷை மூலமும் உரையும் கிலேஸ் கலிக்கோ பயிண்டு | 4 | 0 |
| திருவிளையாடற்புராணவசனம் | 2 | 0 |
| பெரியபுராணம் வசனம் | 2 | 0 |
| தலைவாங்கி அபூர்வசிந்தாமணி | 1 | 0 |
| தயாபரசுந்தரி நாவல் | 0 | 14 |
| இராஜாம்பாள் நாவல் | 0 | 14 |
| சந்திரகாந்தா நாவல் | 0 | 14 |
| ஆனந்தகிருஷ்ணன் நாவல் | 0 | 14 |
| மோகனசுந்தரம் நாவல் | 0 | 14 |
| இராஜேந்திரன் நாவல் | 1 | 2 |
| **ஸ்கூல் புத்தகங்கள்.** | | |
| முதற்புத்தகம் | 0 | 2 |
| முதல் வாசகம் | 0 | 4 |
| இரண்டாம் வாசகம் | 0 | 5 |
| மூன்றாம் வாசகம் | 0 | 5 |
| நான்காம் வாசகம் | 0 | 5 |
| முதல் பாலபாடம் | 0 | 2 |
| வித்யாமாளிகை முதற்புத்தகம் | 0 | 4 |
| ,, இரண்டாவது | 0 | 5 |
| ,, மூன்றாவது | 0 | 5 |
| ,, நான்காவது | 0 | 5 |
| இங்கிலீஷ்தமிழ் முதற்புத்தகம் | 0 | 3 |
| இங்கிலீஷ்தமிழ் ஒக்கப்பலேரி முதலாவது | 0 | 2 |
| மேற்படி இரண்டாவது | 0 | 2 |
| சைவ வினாவிடை | 0 | 4 |
| மேற்படி இரண்டாவது | 1 | 0 |
| இலக்கண வினாவிடை | 0 | 4 |
| எக்சைஸ் புக்கு 80 பக்கம் | 0 | 4 |

இன்னும் இதில் காணப்படாத அநேக புத்தகங்களும் விற்பனைக்குத்தயாராயிருக்கின்றன. ஸ்கூல்புத்தகங்களுக்கு மாத்திரம் உபாத்தியாயர்களுக்கும் வியாபாரிகளுக்கும் நூற்றுக்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம.

ப. முஹியித்தீன் பிச்சை சாஹிபு,
புஸ்தகம் படம் வியாபாரி, 190 கி. கடை,செட்டித்தெரு, கொழும்பு.

Digitized by Roja Muthiah Research Library